ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2412/24 - 2024 නොවැම්බර් මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.11.28

*2412/24 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16 (2ஈ) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்***

*உத்தேச காலித் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கடல் மீட்பு செயற்றிட்டம் – காலி*

**துணைச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக இலக்கம் 19, ஷைத்ய வீதி, கொழும்பு 01 எனும் முகவரியுடைய இலங்கை துறைமுக அதிகார சபையினால் முன்வைக்கப்பட்ட உத்தேச காலித் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கடல் மீட்பு திட்டத்திற்கான துணைச் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்கள் பரிசீலனைக்காக கீழ்வரும் இடங்களில் 2024.11.28 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு நாளாந்தம் மு. ப. 8.30 முதல் பி. ப. 4.15 வரை வைக்கப்பட்டுள்ளது. (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர)*

இது தவிர கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.coastal.gov.lk இலும் அவ்வறிக்கை மும்மொழிகளிலும் பரிசீலனைக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், 4 ஆம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.
2. மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத, பத்தரமுல்ல
3. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், இல. 811/A, ஜயந்திபுர மாவத, பத்தரமுல்ல
4. மாவட்ட செயலகம், காலி
5. பிரதேச செயலகம், காலி
6. மாநகர சபை, காலி
7. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மாவட்ட அலுவலகம், காலி
8. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், பிரதேச அலுவலகம், உனவட்டுன, காலி

இந்த உத்தேச திட்டத்தினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்த துணைச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான பொதுமக்கள் அபிப்பிராயங்கள 2024.11.28 ஆம் திகதி முதல் 30 நாட்களினுள் கரையோரம் பேணல் மற்றம் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்கள்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

**பொறியியலாளர் ஆர். ஏ. எஸ். ரணவக,**
பணிப்பாளர் நாயகம் /கரையோரம் பேணல் மற்றும்
கரையோர மூலவள முகாமைத்துவம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
புதிய செயலகம்,
4 ஆம் மாடி,
மாளிகாவத்த,
கொழும்பு 10.

தொலைபேசி எண் : 011-2449754, 011-2387922, 011-2449197
பெக்ஸ் எண் : 011-2438005, 011-2472623
ஈ மெயில் : dg.ccd.lk@gmail.com

EOG 11 - 0172